**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 14–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 2 மற்றும் 5ம் பிரதிவாதிகள் ஆஜர். மற்ற பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.1 சிவசண்முகம்

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. வாதி எனது மகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி என் மகன் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி என் தந்தை , 20ம் பிரதிவாதி என் தாயார் ஆவார். எனக்கும் சிவகாமிக்கும் 1991ம் வருடம் திருமணமானது என்றால் சரிதான். 5ம்பிரதிவாதி 22.06.1992ல் பிறந்தார் என்றால் சரிதான். வாதி நவீனா 11.03.1996ல் பிறந்தார் என்றால் சரிதான்.

2. சிவகாமியுடன் திருமணமாகிய பிறகு எனது குடும்பம் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். எனது தம்பிகள் இருவருக்கும் திருமணமாகவில்லை என்றால் சரிதான். திருமணமான பிறகு நான் கஸ்பா பேட்டை, அண்ணாநகர், ஏர்க்குட்டி தோட்டம், ஈரோட்டில் வசித்து வந்தோம். திருமணமான பிறகு எனக்கும் சிவகாமிக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் 2005ம் வருடம் வரை இல்லை.

3. ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் HMOP NO.140/2005 வழக்கு என் மனைவி விவாகரத்து கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 13.09.2007ல் ஈரோடு சார்பு நீதிமன்றத்தால் விவாகரத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 HMOP NO.140/2005 ஆன வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான்.

4. சிவகாமி தாக்கல் செய்த HMOP NO.140/2005 எதிர்த்து நான் வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான். வாரணாசிக்கவுண்டரின் தந்தை பெயர் சென்னிமலைக்கவுண்டர் என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டருக்கு

வாரணாசிக்கவுண்டர் தவிர ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி ஆகிய மகள்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.4 ஆன பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் 07.11.2007ல் ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி ஆகியோர் வாரணாசிகவுண்டர் பெயரில் எழுதிக்கொடுத்தனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் விவாகரத்தான தேதியிலிருந்து 2 மாத காலத்திற்குள் ஏற்பட்டது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.4ல் பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் விடுதலை செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் மொடவாண்டி சத்தியமங்கலம் கிராமத்தில் உள்ள 5.44 1/2 ஏக்கர் பற்றி எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் காட்டப்பட்ட சொத்துக்கள் தான் தாவா 1ம் அயிட்ட சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணம் வா.சா.ஆ.4 ஆகும் என்றால் சரிதான். பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து ஒருகூட்டு பங்குதாரர் மற்றொரு கூட்டு பங்குதாரரின் பெயரில் விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த ஆவணங்களில் உள்ள சொத்துக்கள் அனைத்து கூட்டு பங்குதாரர்களுக்கும் சேரும் என்று சொன்னால் சரியல்ல.

8. வா.சா.ஆ.4ல் கண்டுள்ள தாவா 1ம் அயிட்ட சொத்தில் வாதிக்கு பொதுவில் 12ல் ஒரு பாகம் உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**